**ஹோட்டல் டெவலப்பேர்ஸ் (லங்கா) லிமிட்டட் - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

ஹோட்டல் டெவலப்பேர்ஸ் (லங்கா) லிமிட்டட்டின் (“கம்பனி”) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளிற்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது

நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 885,123,000 தொகையான நட்டமொன்றாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 957,225,000 தொகையாகக் காணப்பட்டது. ஆகையினால், நிதி விளைவுகளில் ரூபா 72,102,000 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. வருமானம் ரூபா 1,708,886 ஆல் அதிகரித்தமை இவ் முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாகும்.

### 2.2 முக்கிய வருமான செலவீன விடயங்களின் பகுப்பாய்வு

| நிதிக்கூற்றுக்களின் விடயம் | | 2022 | 2021 | 2020 | 2019 |
|---|---|---|---|---|---|
| வருமானம் | (ரூபா. 000) | 2,887,267 | 1,178,381 | 1,081,135 | 2,878,752 |
| வருமானத்தின் அதிகரிப்பு / குறைவு | (ரூபா. 000) | 1,708,886 | 97,246 | (1,797,617) | (31,788) |
| வருமானத்தின் வளர்ச்சி (குறைப்பு) | % | 145.0 | 9.0 | (62.4) | (1.1) |
| மொத்த இலாபம் | (ரூபா. 000) | 1,061,770 | 255,686 | 270,043 | 1,475,059 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மொத்த இலாபத்தின் அதிகரிப்பு / குறைவு | (ரூபா. 000) | 806,084 | (14,357) | (1,205,016) | (8,320) |
| மொத்த இலாபத்தின் வளர்ச்சி (குறைப்பு) | % | 315.3 | (5.3) | (81.7) | (0.6) |
| நிர்வாகச் செலவீனங்கள் | (ரூபா. 000) | 855,887 | 585,498 | 591,036 | 910,514 |
| நிர்வாகச் செலவீனங்களின் அதிகரிப்பு/குறைப்பு | (ரூபா. 000) | 270,389 | (5,538) | (319,478) | 55,975 |
| நிர்வாகச் செலவீனங்களின் வளர்ச்சி (குறைப்பு) | % | 46.2 | (0.9) | (35.1) | 6.6 |
| பெறுமானத்தேய்வு மற்றும் ஏனைய செலவீனங்கள் | (ரூபா. 000) | 673,824 | 554,539 | 550,046 | 797,207 |
| பெறுமானத்தேய்வு மற்றும் ஏனைய செலவீனங்களின் அதிகரிப்பு/குறைப்பு | (ரூபா. 000) | 119,285 | 4,493 | (247,161) | 12,917 |
| பெறுமானத்தேய்வு மற்றும் ஏனைய செலவீனங்களின் வளர்ச்சி (குறைப்பு) | % | 21.5 | 0.8 | (31.0) | 1.6 |
| தேறிய நிதி வருமானம் | (ரூபா. 000) | (371,412) | (123,255) | (31,696) | (39,370) |
| தேறிய நிதி வருமானத்தின் அதிகரிப்பு/குறைப்பு | (ரூபா. 000) | (248,157) | (91,559) | 7,674 | (14,003) |
| தேறிய நிதி வருமானத்தின் வளர்ச்சி (குறைப்பு) | % | 201.3 | 288.9 | (19.5) | 55.2 |
| வரிக்குப் பின்னரான இலாபம் | (ரூபா. 000) | (885,123) | (957,225) | (918,107) | (325,630) |
| வரிக்குப் பின்னரான இலாபத்தின் அதிகரிப்பு/குறைப்பு | (ரூபா. 000) | 72,102 | (39,118) | (592,477) | (198,123) |
| வரிக்குப் பின்னரான இலாபத்தின் வளர்ச்சி / (குறைப்பு) | % | (7.5) | 4.3 | 181.9 | 155.4 |

**2.3 விகிதப் பகுப்பாய்வு**

| **விகிதங்கள்** | **2022** | **2021** | **2020** | **2019** | **2018** |
|---|---|---|---|---|---|
| மொத்தலாப விகிதம் % | 37 | 22 | 25 | 51 | 51 |
| தேறியலாப/(நட்ட) விகிதம் % | -22 | -83 | -81 | -11 | -4 |
| நடைமுறை விகிதம் | 0.64 | 0.47 | 0.34 | 0.94 | 0.79 |
| விரைவு விகிதம் | 0.21 | 0.15 | 0.16 | 0.56 | 0.43 |
| ஈடுபடுத்திய மூலதனம் மீதான வருவாய் | -0.06 | -0.07 | -0.06 | -0.02 | -0.01 |
| பங்கொன்றின் மீதான வருமானம்(ஈபீஎஸ்) | -0.43 | -0.46 | -0.45 | 0.54 | -0.05 |

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்பாட்டு வினைத்திறமையீன்மைகள்**

| | **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவக் கருத்துரை** | **சிபாரிசு** |
|---|---|---|---|
| (அ) | மக்கள் வங்கியிடமிருந்து பெறப்பட்ட ரூபா 2 பில்லியன் தொகையான காலக் கடன் குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் ரூபா 1,427 மில்லியன் மாத்திரம் 2023 ஏப்ரல் வரை செயற்திட்ட செலவீனமாக பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், தொழிற்பாட்டு | சம்பத் வங்கியுடன் புதிய வசதி ஒழுங்குசெய்ப்பட்டதுடன் செயற்திட்டத்திற்கான மொத்த வங்கி வசதி ரூபா 3,800 மில்லியனாகவிருந்தது. | குறித்த நோக்கத்திற்கு நிதியங்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மூலதன் தேவைப்பாட்டிற்காக ரூபா 900 மில்லியன் மேலதிகப்பற்று வரையறையினை கொண்டுள்ள மக்கள் வங்கியின் நடைமுறைக் கணக்கிற்கு கடன் மீளளளிப்பு பெறப்பட்டிருந்தது. எனினும், மீளளிப்பு செயன்முறையிலுள்ளதுடன் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சொல்லப்பட்ட மேலதிகப்பற்று ரூபா 883 மில்லியனாகவிருந்தது. ஆகையால், கம்பனியானது முறையாக மதிப்பிடுவதற்கும் குறித்த நோக்கத்திற்காக நிதியங்களைப் பயன்படுத்துவதற்கும் கம்பனி தவறியிருந்தது. | எங்களுடைய செயற்திட்ட காசுப்பாய்ச்சல் மற்றும் மேலதிக வங்கி மேலதிகப்பற்றுவசதி 600 மில்லியனாகவிருந்ததுடன் காலக்கடனிலிருந்து பயன்படுத்தப்பட்ட தொகை 2023 ஆம் ஆண்டின் போது செயற்திட்டத்திற்கு மீள்வழங்கப்பட்டிருந்தது. | |
| (ஆ) | கம்பனிக்குரிய 2016 இலிருந்து கார் தரிப்பிட வசதிக்காக பயன்படுத்தப்பட்டு வருகின்ற ஹொட்டல் இன் முன் பக்கத்திலுள்ள 30 பேர்ச் காணியின் உண்மையான உரித்து இருந்த போதும், குத்தகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. மேலும், 2022 திசெம்பர் 20 இல் நகர அபிவிருத்தி அதிகாரசபைக் வழங்கப்பட்ட அறிவித்தலின் பிரகாரம், 2021-2023 ஆம் காலப்பகுதிக்காக செலுத்தவேண்டிய தொகை ரூபா 24 மில்லியனாகவிருந்ததுடன் இறுதித் திகதி 2023 சனவரி 01 ஆகவிருந்தது. எனினும், மேற்கூறப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் கம்பனி வேலை செய்வதற்கு தவறியது. | உடன்படிக்கையில் கைச்சாத்திடும் செய்முறை தற்போது இடம்பெறுவதுடன் இது கொவிட் 19 இன் பரம்பலால் முன்பு காலதாமதப்படுத்தப்பட்டிருந்தது. நிலுவையாகவுள்ள குத்தகை பணங்களிற்கான உண்மையான ஏற்பாடு ஏற்கனவே நிதிக்கூற்றுக்களில் வழங்கப்பட்டிருந்ததுடன் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டிற்கான நிலுவைத்தொகை 2023 இல் செலுத்தப்பட்டிருந்தது. | குத்தகை உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட வேண்டும். |

## 3.2 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | சிபாரிசு |
|---|---|---|
| இரண்டு கட்டங்களாக பிரிக்கப்பட்டு ரூபா 2 பில்லியன் முதலீட்டில் கொழும்பு கில்ரனிற்காக கம்பனியானது விரிவான புத்தாக்கத் திட்டத்தினை அமுல்படுத்தியிருந்ததுடன் கொட்டலானது நிலையான மேற்தலைகளை மேவுகை செய்யும் வகையில் வருமானத்தை உழைப்பதற்கும் புத்தாக்க காலப்பகுதியின் போது இலாபத்தை உழைக்கும் நிலைமையிலுள்ளது. அனைத்துப் பொது இடங்கள், பிரதான சமையலறை மற்றும் பிரதான உணவுண்ணும் உணவகம் 1வது கட்டத்தின் கீழ் பூர்த்திசெய்யப்பட்டிருந்த அதேநேரம் சிவில், வடிவமைப்பு வேலைகள் மற்றும் இலத்திரனியல் மற்றும் குழாயிடல் வேலைகளை உள்ளடக்கி விருந்தினர் அறை மற்றும் கொறிடோர்களின் புத்தாக்க வேலைகள் 2வது கட்டத்தின் கீழ் திட்டமிடப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |

| | | | |
|---|---|---|---|
| (அ) | கம்பனியானது பெறுகை விடயங்களின் எல்லைகளை நேரத்திற்கு நேரம் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதும் அதற்கிணங்க பொறியிலாளர்களின் மதிப்பீடு சீரமைக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால், பின்வரும் பெறுகை விடயங்களிற்காக முதலாவது பொறியிலாளர்களின் மதிப்பீட்டுடன் வழங்கப்பட்ட விலைமனு விலைகள் வேறுபட்டிருந்தது.<br><br>**விடயம்** — **விலகல்**<br>விரிப்பு மற்றும் கம்பளங்களை வழங்கல் — 68%<br>சுகாதாரப் பொருத்திகளை வழங்கல் — 62%<br>அலங்கார மற்றும் கட்டிடக்கலை வெளிச்சப் பொருத்துக்களை வழங்கி தாபித்தல் — 38%<br>திரைச்சீலை முறைமையினை வழங்கி தாபித்தல் — 61%<br>சுவர்ப் பூச்சுக்களை வழங்கல் — 70% | குறிப்பிடப்பட்ட வளங்கள் மற்றும் குறிப்பிடப்பட்ட உற்பத்தி/குறியீடுகளிடமிருந்து கிரய ஆலோசனையாளரால் பெறப்பட்ட விலைகளிடமிருந்து பொறியிலாளர்கள் மதிப்பீடு பெறப்பட்டிருந்தது. அதிகுறைந்த மதிப்பிடப்பட்ட விலைமனுதாரர்களை தீர்மானிக்கின்ற போது உற்பத்தியை குறைக்கும் மற்றும் தெரிவு செய்வதற்கு எதிராக விலைக்காக கருதப்பட்ட பொருட்களால் சில பொருட்களை ஒப்பிடும் போது குறிப்பிடத்தக்களவு வித்தியாசம் ஏற்பட்டமை அவதானிக்கப்பட்டது. பொதுவாக, மூல நாடானது வேறுநாடாக மற்றும் அதிகுறைந்த செயலாற்றல் நிபந்தனையுடன் இருக்கக்கூடிய உற்பத்திகளுடன் ஒப்பிடும் போது குறிப்பிடப்பட்ட வளமானது அதிகூடிய விலையிலிருக்கும். நூங்கள் அதிகுறைந்த விலைமனுதாரரை சந்தை வழிகாட்டியாக கருதுவதுடன் வழங்குவதற்கு கருதுகின்றோம். இறுதியாக மதிப்பீடுகள் விலைமனு செய்முறையை தொடங்கிய பின்னர் மாற்றப்பட மாட்டாது. | சீரமைக்கப்பட்ட நோக்கெல்லைக்கிணங்க சீரமைக்கப்பட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 7 பெறுகைகளிற்காக விலைமனு மதிப்பீடு மற்றும் நோக்கக் கடிதத்தின் செய்முறையில் முக்கியளவு தாமதங்கள் அவதானிக்கப்பட்டது. | கால கூட்டங்களை நடாத்துவதில் ஏற்பட்ட காலதாமதம் கொவிட் பரம்பல் காரணத்தால் ஏற்பட்ட நாடு பூட்டல், பரம்பலினால் உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட சந்தை விலை மாற்றம் போன்றவற்றினால் ஏற்பட்ட இடர்களை ஈடுசெய்வதற்கு விலைமனுதாரர்களின் கோரிக்கை மீது சில நேர நீடிப்புக்கள் வழங்கப்பட்டிருந்தது போன்றவற்றால் காலதாமதம் ஏற்பட்டிருந்தது. | புத்தாக்க செய்முறை விரைவுபடுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | ரூபா 77,630,334 தொகைக்கு விரிப்புக்கள் மற்றும் கம்பளங்களை வழங்கும் பெறுகைச்செயன்முறைக்காக தெரிவுசெய்யப்பட்ட விலைமனுதாரர் 2022 மார்ச் 08 இல் வழங்கப்பட்ட நோக்கக் கடிதத்ததை ஏற்றுக்கொண்டு விலைடனு ஆவணங்கள் மற்றும் நோக்கக்கடிதத்தின் நிபந்தனைகளின் பிரகாரம் வழங்கல்களை மேற்கொள்ள ஏற்றுக்கொண்டபோதும் 2022 ஓகஸ்ட் 3 இல் தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களால் வழங்கப்பட்ட கடிதத்தின் பிரகாரம் விலைமனுவில் குறிப்பிடப்பட்ட அளவை வழங்கமுடியாதுள்ளது என்பதை அறிவித்திருந்தனர். எனினும், கம்பனியானது இது தொடர்பில் தேசிய பெறுகை வழிகாட்டியில் (அமுலாக்க தவறு) 8.11.4 ஆம் பங்தியில் குறிப்பிடப்பட்டதை பின்பற்றியிருக்கவில்லை. அதற்குமேலதிகமாக, விரிப்புக்களினை ரூபா 34,566,500 விலையில் வழங்குவதற்காக பின்னையை வழங்கும் பெறுகையில் மேற்கூறப்பட்ட பிரச்சனை ஏற்பட்டதுடன் தேசிய பெறுகைச் செயன்முறையின் 8.11.4 ஆம் பந்தி பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | விலைமனு சமர்ப்பிக்கப்பட்டபோது பாதிக்கப்பட்ட தற்போதுள்ள சந்தை நிலைமைகள் மற்றும் இந்தக் காலப்பகுதியின் போது எதிர்கொண்ட முடிவுறுத்தல் அனுபவம் போன்றவற்றை கருத்திற்கொள்ளும் போது இந்த வழிகாட்டிகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | தேசிய பெறுகை வழிகாட்டிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | வார்ப்பிரும்பு குளியல் தொட்டிகளின் முதலாவது வகை யின் வழங்கல் பெறுகையானது ரூபா 8,596,500 இல் உரிய விலைமனுதாரருக்கு தொடர்ச்சியாக வழங்கப்பட்டது. உட்புற வடிவமைப்பு ஆலோசனையாளரால் 2023 ஏப்ரல் 27 ஆந் திகதியிடப்பட்ட பரீட்சிப்பு அறிக்கையிகன் பிரகாரம், விபரக்குறிப்புடன் மற்றும் தேவையான வடிவத்துடன் இணங்காமையால் 06 எண்ணிக்கைகள் அனுப்பபட்டதுடன் 05 எண்ணிக்கைகள் நிராகரிக்கப்பட்டது. நிராகரிக்கப்பட்ட ஒப்பந்த நிபந்தனைகளை பூர்த்தி செய்வதற்காக 2023 ஓகஸ்ட் 31 இல் உள்ள விலைகளின் பிரகாரம் சரியான உற்பத்தியுடன் நிராகரிக்கப்பட்ட குளியல்தொட்டிகளிற்குப் பதிலாக புதிய தொட்டிகளை போடுவதற்கு கம்பனி அறிவிருத்திருந்தபோதிலும் ஒப்பந்தகாரர் பதிலளித்திருக்கவில்லை. | அந்தக் குளியல் தொட்டடிகள் வார்ப்பிரும்பாகவிருந்ததுடன் விலைமனுதாரர் அனைத்து தொழில்நுட்ப விதப்புரைகளுடன் இணங்கியிருந்ததுடன் இணங்கயிதாக அவர் கருதப்பட்டிருந்தார். இரும்புகளின் மேற்பரப்பு சீராக இருக்கவில்லையென குறிப்பிட்டு அவை கட்டிடக்கலைஞரால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஆகையால், ஏனைய பொருட்குளிற்கு நிகராக மேற்பரப்பு இருந்தால் வார்ப்பிரும்புகளுடன் ஏனைய குறியீடுகளை சந்தையில் தேடுவதற்கு வேண்டப்பட்டது. ஏனைய குறியீடான TOTO வுடன் அவதானிக்கப்பட்ட விலகல்களுக்குள் அவை இருந்தது என பரீட்சித்து அவதானிக்கப்பட்டது.. எனினும், பூச்சுக்களிடப்பட்ட பின்னர் இரும்பு தொட்டி நிலைமையானது அனைத்து குறியீடுகளிற்கு ஒரே மாதழராழ இருக்குமென அவர்களுடைய தொழிற்சாலை | புத்தாக்க செய்முறை விரைவுபடுத்தப்பட வேண்டும். |

குறிப்பிட்ட பின்னர் அந்த நிராகரிப்பினை மீள்பார்வையிட விலைமனுதாரர் வேண்டியிருந்தனர். 2023 ஆகஸ்ட் 17 இல் அவர்களுடன் மேற்கொள்ளப்பட்ட கூட்டத்தின் பின்னர், ஏனைய கில்ரன் கொட்டல்களிலுள்ள இரும்புத்தொட்டிகளுடன் அனுபவத்திலுள்ளவர்களால் இறுதிப் பரீட்சிப்பு மேற்கொள்வதற்கு பரஸ்பரமாக ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் அது சாத்தியமானால் அதனை மீள ஏற்றுக்கொள்வதற்கும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. செயற்படுத்துவரால் ஏற்படுத்தப்படுத் தீர்மானம் இறுதியாக இருக்கப்படும் என்பதுடன் அவர்களால் இது ஏற்றுக்கொள்ளப்பட்டமையால் ஏதாவது நிராகரிப்புக்கள் விலைமனுதாரரால் ஏற்றுக்கொள்ளப்படும். இந்தச் செயன்முறை இன்னும் முடிவுறுத்தப்பட வேண்டியுள்ளது.